[1981 பிப்ரவரி 5

பெரணமல்லூர் வட்டாரத்தில் ஊட்டச் சத்துணவுத் திட்டம்.

*வினா எண். 194—திரு. பி. எம். வெங்கடேசன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊட்டச் சத்துணவுத் திட்டத்தில் பெரணமல்லூர் வட்டாரம் இடம் பெற்றுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. பி. எம். வெங்கடேசன் : தலைவர் அவர்களே, பெரணமல்லூர் வட்டாரம் ஏற்கெனவே வளர்ச்சியற்ற வட்டாரம். இனியாவது உடனடியாக ஊட்டச் சத்துணவுத் திட்டத்தை ஏற்படுத்த அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஏற்கெனவே பதில் சொல்லி இருக்கிறேன்.

தர்மபுரி பேருந்து நிலையம்.

*வினா எண். 195—திரு. எஸ். அரங்கநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரியில் தற்காலிகப் பேருந்து நிலையத்தில் மழை காரணமாக சகதி ஏற்பட்டு பயணிகள் அவதிப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) புதிய பேருந்து நிலையம் அமைக்க ஆரம்பித்து ஓராண்டு காலமாகியும் திறக்கப்படாமல் இருக்கக் காரணமென்ன ?

(இ) உடனே திறக்கப்பட அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ), (ஆ) மற்றும் (இ) ; புதிய பேருந்து நிலையம் 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 28-ந் தேதி அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS